(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 30.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2010, ஓகத்து 19, வியாழக்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0231/ '10

01.

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் தங்கல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய தங்கல்ல கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின், அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0264/ '10

02.

கௌரவ ரஊப் ஹகீம்,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடுகன்னாவ, குருகுன்தல, 18 ஆம் இலக்க இல்லத்தில் வதியும் பட்டதாரி ஆசிரியரான திரு. எஸ்.எம்.எம். ஹலீம் 2010.02.01 ஆம் திகதி தனது வேலைத்தளமான மாவனெல்ல சாஹிரா தேசிய பாடசாலையில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் வெளி நபர் ஒருவர் பாடசாலைக்குள் அத்துமீறி நுழைந்து திரு. ஹலீமைத் தாக்கி இவரின் பிரத்தியோக வாகனமொன்றுக்கும் சேதம் விளைவித்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) திரு. ஹலீம், இது சம்பந்தமாக மாவனெல்ல பொலிஸ் நிலையத்தில் 273/06 ஆம் இலக்க, 2010.02.07 ஆம் திகதிய முறைப்பாடொன்றைச் செய்துள்ள போதிலும் அதுபற்றி இன்றுவரை முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) அரச பாடசாலை வளவொன்றினுள், கடமைக்கு இடையூறு ஏற்படுத்தி ஓர் ஆசிரியரைத் தாக்கியமை தொடர்பாக செய்யப்பட்ட மேற்படி முறைப்பாடு குறித்து, பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடத்துவதற்கான உத்தரவொன்றை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், என்?

0352/ ‘10

03.

கௌரவ சுனில் ஹந்துனெத்தி,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை, ஜனாதிபதி மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட சிறைக்கைதிகளின் எண்ணிக்கை யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) அவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களின் பெயர்களையும் அந்த ஒவ்வொரு நபரும் புரிந்த குற்றங்களையும் உள்ளடக்கிய ஓர் பட்டியலை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், என்?

0375/ ‘10

04.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு லீட்டர் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், உலை எண்ணெய், விமான எண்ணெய் ஆகியவற்றின் விற்பனை விலையையும்,

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு உற்பத்திப் பொருட்களினதும் லீட்டர் ஒன்றிற்கு விதிக்கப்படும் சகல வரிகளையும்,

(iii) மேற்படி பொருட்களின் லீட்டர் ஒன்றுக்கான செலவையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) கடந்த ஐந்து வருடங்களாக,

(i) மாதாந்தம் எத்தனை லீற்றர் விற்பனை செய்யப்பட்டது என்பதை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) உலக எண்ணெய் விலையுடன் ஒப்பிடுகையில் மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட பொருட்களின் லீட்டர் ஒன்றுக்கான இலாபம் அல்லது நட்டத்தினையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0391/ '10

05.

கௌரவ விக்டர் அந்தனீ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் "ஜாதிக சவிய", "கமநெகும" கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0392/ '10

06.

கௌரவ கனக ஹேரத்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்தில் "ஜாதிக சவிய", "கமநெகும" கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0393/ '10

07.

கௌரவ திலும் அமுனுகம,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் "ஜாதிக சவிய", "கமநெகும" கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0394/ ‘10

08.

கௌரவ ஜானக பண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் “ஜாதிக சவிய”, “கமநெகும” கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0395/ ‘10

09.

கௌரவ வி.கே. இந்திக,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் “ஜாதிக சவிய”, “கமநெகும” கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0396/ ‘10

10.

கௌரவ (டாக்டர்) ரோஹன புஷ்ப குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தில் “ஜாதிக சவிய”, “கமநெகும” கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றின் பெயர்கள் எவை என்பதையும்,

(iii) அதற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நிதி எவ்வளவென்பதையும்,

(iv) அக்கருத்திட்டங்களின் கீழ் பயனடையும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0232/ ‘10

11.

கௌரவ சஜித் பிரேமதாச,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியலத்திற்குட்பட்ட கட்டுவென கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் பரிபாலிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைளின் எண்ணிக்கை என்னவென்பதையும்,

(ii) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளில் தற்போது மூடப்பட்டுள்ள அல்லது மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அப்பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இக்கோட்டத்திற்குரிய பாடசாலைகளில் மிகையான ஆசிரியர்கள் உள்ளனரா என்பதையும்,

(ii) அவ்வாறான பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்,

(iv) பற்றாக்குறை நிலவுவது எந்தப் பாடங்களுக்கு என்பதையும்,

(v) இவ்வாறு ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(vi) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0266/ '10

12.

கௌரவ ரஊப் ஹகீம்,— தேசிய மரபுரிமைகள், கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தொல்பொருள் கட்டளைச் சட்டத்தின் (188ஆவது அதிகாரம்) கீழ் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த புனித தலங்களாக (நினைவுத் தூபிகள்), மேற்படி அமைச்சினால் இதுவரையில் இலங்கையில் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமயம் சார்ந்த புனித தலங்கள் மற்றும் முஸ்லிம் கலாசார மத்திய நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி தலங்களின் பெயர்கள், விலாசங்கள், அவை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த வர்த்தமானி இலக்கத்தினை மாவட்டரீதியில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0376/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பால்மா, எரிவாயு, சீனி, பருப்பு, வெங்காயம், உருளைக்கிழங்கு, அரிசி, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், பெற்றோலியம் ஆகிய இறக்குமதிப் பொருட்கள் மீது விதிக்கப்படும் சுங்கவரி மற்றும் ஏனைய சகல விதமான வரிகளையும்,

(ii) கடந்த 10 வருடங்களாக இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி பொருட்களின் அளவையும்,

(iii) கடந்த 5 வருடங்களாக வரி விதிப்பின் மூலம் ஈட்டப்பட்ட வருமானத்தையும்,

(iv) மேற்படி பொருட்களில் ஏதாவது கடந்த 5 வருடங்களில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பின் அவற்றின் அளவை வருடாந்த அடிப்படையிலும்,

(v) கடந்த 5 வருடங்களுக்கான மேற்படி பொருட்களின் வருடாந்த நுகர்வையும்

தனித்தனியாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0233/ ' 10

14.

கௌரவ சஜித் பிரேமதாச, — கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல வலயக் கல்விக் காரியாலயத்திற்குரிய கட்டுவென கோட்டக் கல்விக் காரியாலயத்தினால் நிருவகிக்கப்படும் அரசாங்கப் பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளுக்கும், பொதுவான தேவைகளுக்கும் பற்றாக்குறை நிலவுகிறதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இப்பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலை முறைமையில் மின்சார வசதியற்ற ஆசிரியர் விடுதிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) அவற்றிற்குரிய பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

(v) மரத்தளபாடங்களுக்கான தேவை காணப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(vi) அத்தேவைகள் யாவையென்பதையும்,

(vii) விஞ்ஞான கூடங்கள் மற்றும் நூலகங்கள் அற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(viii)அப் பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்,

அவர் இச்சபைக்குச் சமர்ப்பீரா?

(இ) (i) மேற்படி தேவைகளைப் பூர்த்திசெய்யத் தேவையான நிதியை அப்பாடசாலை களுக்கு ஒதுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) அவ்வாறாயின் அது எவ்வளவு காலத்தினுள் நடைபெறுமென்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0380/ '10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதி மன்றம்,மேல் நீதி மன்றம் மற்றும் நீதவான் நீதிமன்றம் ஆகியவற்றில் சேவையாற்றுகின்ற சகல நீதிபதிகளினதும் பெயர்களையும் பிறந்த திகதிகளையும்,

(ii) தற்போதைய பதவியில் அவர்களின் தகுதிகள் மற்றும் அனுபவத்தினையும்,

(iii) உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்பட்ட சகல பிரிவுகளையும் சார்ந்த நீதிபதிகளின் எண்ணிக்கையையும்,

(iv) சகல நீதிபதிகளுக்கும் ஏன் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வழங்கப்படவில்லை என்பதையும்,

(v) அவர்களுக்கு வாசஸ்தலம் கொடுக்கப்படவில்லையெனின், வீட்டிற்கெனக் கொடுப்பனவொன்று வழங்கப்படுகின்றதா என்பதையும்,

(vi) அவ்வாறாயின், செலுத்தப்பட்ட தொகையினையும் கொடுப்பனவு எவ்வளவு காலமாக வழங்கப்படுகின்றது என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல்,ஏன்?

## அனுதாபப் பிரேரணை

1.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஏ.டீ.ஜே.எல். லியோ.

2.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எஸ். சிவமகாராஜா.

3.

காலஞ்சென்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ எட்மண்ட் விஜயசூரிய.

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

தொழில் உறவுகள், விளைவுப்பெருக்க மேம்பாட்டு அமைச்சர்,— தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்,— தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும், நிறுவகத்தின் நிருவாகத்திற்கென ஆளுநர் சபையொன்றைத் தாபிப்பதற்கும்; தொழிநுட்பக் குழுக்களையும் தொழிற்சங்கங்களுக்கான பாடசாலை ஒன்றையும் தாபிப்பதற்கும்; ஆராய்ச்சியை நடாத்துவதற்கும், அளவைகளை நிறைவேற்றுவதற்கும், அத்துடன் இலங்கையில் தொழிற்கற்கைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சியை ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

---

# .பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை அரச மருந்தாக்கட் பொருட்கள் உற்பத்திக் கூட்டுத் தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*3.

சுகாதார அமைச்சர்,— விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2007,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2007.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த மருத்துவமனை வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*4.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்—2006,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.07.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2006.12.31 ஆம் திகதி முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படுமாக.

(சுகாதார நலத்துறை, போசணை பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.05.05 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*5.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை – 2007,— 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்திற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2007 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2007 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*6.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆண்டறிக்கை - 2006,— 1994 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்பவியல் அபிவிருத்தி சட்டத்தின் 40(3) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.08.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*7.

தொழில்நுட்பவியல், ஆராய்ச்சி அமைச்சர்,— ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை – 2006,— 2005ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தின் 29 (5) பிரிவிற்கமையவும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) பிரிவிற்கமையவும் 2009.09.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2006 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2006 டிசம்பர் 31 ஆம் திகதி வரை முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகளுடனான ஒத்தியல்பு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையின் ஆண்டறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழில்நுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் 2009.08.06 ஆந் திகதி பரிசீலிக்கப்பட்டது)

*8.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஓகத்து 17, 2010) [1]

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] “ சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.